1973 மார்ச் 19]

திரு. என். டென்னிஸ் : குறுகிய காலத்திற்குள் இதுபோன்ற வழக்குகளில் ஒரு முடிவினை எடுக்க வேண்டும் என்பதனை அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த முயற்சிகளை உயர்நீதிமன்றம் எடுத்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட் சஸ்பெண்டு செய்யப்பட்டு 3 வருடமாகிறது. இன்னமும் அந்த வழக்கில் ஒரு முடிவு தெரிவிக்கப்படாது காலதாமதம் ஆகிறதே, இதுபோன்ற வழக்குகளில் ஒரு வருடத்திற்குள் முடிவினைத் தெரிவிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீண்டகாலம் சஸ்பென்ஷனில் வைக்கக் கூடாது என்பதுதான் அரசின் உத்தேசம். அந்த அடிப்படையில் இதுபோன்ற வழக்குகளில் விரைவாகத் தீர்ப்பினைக் கூற நடவடிக்கைகள் உருவாகும்.

ராமநதி அணைக்கட்டுத் தொழிலாளர்களுக்கு 'திட்டப்படி'

*423 வின—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடானா நதி, ராமநதி அணைக்கட்டுத் தொழிலாளிகள் ப்ராஜக்ட் அலவன்ஸ் கோரி அம்பாசமுத்திரம் அலுவலகத்தின் முன்பு 1972 ஏப்ரல் மாதத்தில் உண்ணாவிரதம் இருந்தது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 15—4—1972 அன்று முதல் நான்கு தொழிலாளிகள் 'திட்டப்படி' (Project allowance) அரசு விரைவில் வழங்குமாறு கோரி உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தனர். பின்னர் 27—4—1972 அன்று போராட்டக்குழு அணைக்கட்டுத் தொழிலாளர் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் பேரில் உண்ணாவிரதத்தை நிறுத்துவது என்று முடிவு செய்து 28—4—1972 அன்று காலை உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : இந்த அலவன்சு எல்லோருக்கும் வழங்கப் பட்டு விட்டதா ? இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொழிலாளர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து ப்ராஜெக்ட் அலவன்சு தருவதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பித்திருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற ஆண்டு இந்த உண்ணாவிரதம் நடந்து மே மாதம் 15-ம் தேதிக்குள் ப்ராஜெக்ட் அலவன்சு கொடுக்கப்பட வேண்டும் என்பதாக உத்தரவிடப்பட்டது. என்றாலும் அது ஏன் இன்னமும் கொடுக் கப்படவில்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொழிலாளர்களின் வேண்டு கோள்களைக் கவனமுடன் பரிசிலனை செய்தபிறகு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடானா, இராமநதி திட்டங்களில் அரசுப் பணியிலும், அரசுப் பணி யில்லாத பணியிலும் வேலைக்கு அமர்ந்துள்ள வேலைநிதி ஊதியம் பெறுவோர் அந்தந்தப் பதவிகளில் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதற்கொண்டு அவர் களுக்கு ஈட்டுப்படி வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

Ryots of Chittar-Pattanamkal Channels

* 424 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to provide lift irrigation facilities to the ryots of the Chittar-Pattanamkal Channels in Kanyakumari district to raised portions?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். டென்னிஸ் : சித்தாறு-பட்டணங்கால் செல்லும் வழி மேடுபள்ள மானது. மேட்டில் உள்ள பல நிலங்கள் இந்தக் கால்வாய் மூலமாகப் பயன் அடையாமல் இருக்கிறது. ஆகவே மேட்டு நிலங்களுக்குத் தண்ணீர் பாய லிப்ட் இர்ரிகேஷன் மூலம் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சித்தாறு-பட்டணங்கால் திட்டம் நீரோட்டப் பசானத்துக்கு மட்டுமே வகை செய்கிறது. இத் திட்டத் தின் கீழ் இறைவைப் பாசனத்துக்கு வகை செய்யப்படவில்லை. இந்த ஆயக் கட்டின் உயர்ந்த மேட்டுப் பகுதிகளுக்கு இறைவைப் பாசன வசதிகள் செய்து தர வேறெந்த செயற்குறிப்பும் பரிசீலனையில் இல்லை.